**பண்டாரவெல மா நகர சபை**

**பதுளை மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 05 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 06 ஆந் திகதியும் மா நகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டாரவெல மா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 10,454,085 தொகை இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது முற்கொடுப்பனவுக் கணக்கின் மீதி ரூபா 833,778 தொகையினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது முற்பணக் கணக்கின் மீதி ரூபா 911,912 தொகையினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

(ஈ) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வைப்புக் கணக்குகள் தொடர்பான ஆரம்ப மீதி ரூபா 3,393,738 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின பலவின வைப்புக்கள் பேரேட்டுக் கணக்குகின் ஆரம்ப மீதி ரூபா 236,040 இனால் மிகையாகப் பிரதி பண்ணப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டில் இருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்த நிலுவை ஏனைய வருமான ஆரம்ப மீதி ரூபா 4,902,264 தொகை பேரேட்டில் வருமானக் கணக்குகளில் குறைவாகப் பிரதி பண்ணப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமை கூற்றில் நூலகப் புத்தகங்கள் கொள்வனவுகள் என ரூபா 87,830 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் முற்கொடுப்பனவு என ரூபா 82,878 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமை கூற்றில் பலவின வைப்புக்கள் மீதி என ரூபா 41,817,475 தொகையினால் குறைவாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 5,367,241 தொகையான நிலையான வைப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஓ) 03 சேமிப்புக் கணக்குகள் தொடர்பாக ரூபா 102,918 இற்கான வட்டி வருமானம் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் போது சபையில் கடமையாற்றிய 38 ஊழியர்கள் தொடர்பாக வைப்புச் செய்யப்பட்டிருந்த பிணை வைப்புக்கள் ரூபா 502,272 தொகை பெறுமதி நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(க) நடைமுறை ஆண்டிற்கான கடன் வட்டி பெறுமதி ரூபா 216,904 இனை வட்டிச் செலவுகள் என இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ச) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த மொத்த வட்டி பெறுமதியாகிய ரூபா 3,435,097 தொகை தொடர்பாக கடன்கொடுத்தோருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஞ) மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் என ரூபா 705,243 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ட) வீதிக் கோடு சான்றிதழ் வழங்குதல் மூலம் சபை உழைத்திருந்தத ரூபா 678,030 தொகை வருமானத்தைக் கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டிற்காக மிகை அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ண) பொது பயன்தரு சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூலதன வருமானம் ரூபா 93,000 தொகையினால் குறைவாக நிதி மற்றும் செயற்பாட்டுக் கூற்றில் பிரதி பண்ணப்பட்டிருந்தது.

(த) நலன்புரி மற்றும் பொதுவசதிகளின் கீழ் போக்குவரத்துத் தொடர்பாடல் மற்றும் தேவையான சேவைச் செலவுகள் என ரூபா 900,000 மிகையாக நிதி செயலாற்றல் கூற்றில் பிரதி பண்ணப்பட்டிருந்தது.

(ந) பொது பயன்தரு சேவையின் கீழ் வழங்கல்கள் மற்றும் உபகரண செலவுகளாகிய ரூபா 648,750 வும் மொத்தச் செயற்பாட்டு செலவுகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ப) ஓய்வூதியம், ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக்கொடை செலவு ஆகிய ரூபா 699,036 மொத்த செயற்பாட்டு செலவுகள் குறைவாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ம) நிலுவை வீதவரி வருமானம் ரூபா 300,000 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ய) மீளாய்வாண்டின் போது இனங்காணப்படாத ரூபா 3,479,655 இற்கான கணக்கு மீதி திரண்ட நிதயத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டமையால் அப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 84,715,760 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டும் மீதிகளிடையே ரூபா 3,683,649 தொகைக்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 90,768,360 ஆகக் காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 75,689,780 தொகையாக இருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

ரூபா 328,694,574 தொகை பெறுமதியான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மா நகர சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 43,001,739 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 35,355,602 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

--------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மா நகர சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 55,747,980 தொகை ஆகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 67%(ரூபா 44,085,716) தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் XII ஆம் பகுதி 254(7) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 77,425,832 கூட்டுத்தொகைக்கான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் XII ஆம் பகுதி 230 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வீதவரி ஆதனங்கள் தொடர்பாக 5 வருடங்களுக்கு ஒரு முறை ஆதனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், சபை அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) மா நகர சபை அதிகாரச் சட்டத்தின் 247(அ)(ஆ)(இ) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மா நகர சபை அதிகார பிரதேசத்தில் நடத்தப்படும் 28 வர்த்தக நிறுவனங்கள் தொடர்பாக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(உ) மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பெறுமதிக்கு பாதகம் ஏற்படும் விதமாக 2014 ஆண்டின் போது பௌதீக ரீதியாக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த 34 ஆதனங்களுக்காக புதிய பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் 2007 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் மீது வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது.

2.2.2 குத்தகை

-----------------

2015 ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நிலுவை கேள்வி குத்தகை ரூபா 4,588,015 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணங்கள் தொடர்பாக ரூபா 297,717 தொகையும் மற்றும் முத்திரைக கட்டணம் தொடர்பாக ரூபா 5,103,461 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

கணக்காய்வு திகதியாகிய 2016 ஜனவரி 27 திகதி வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பௌதீகப் பரிசோதனைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 17 வகையினைச் சேர்ந்த வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான தகவல்கள் பொருட் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிருவாகம்

----------------------------------

2015 ஆண்டின் போது உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்த ரூபா 7,982,439 இற்கான 16 அபிவிருத்தி செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டின் போது பாதீடு, வருமானங்கள் மற்றும் செலவுகளின் கட்டுப்பாட்டின் போது கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

-------------------------------------------------

மீளாய்வாண்டின் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

------------------------------------

2015 ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

---------------------------------------------------------------------------------------------

நடைமுறை ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்பட்டிருக்கவில்லை.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------

மா நகர சபைக்குச் சொந்தமான 3 வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

தீர்க்கப்படாதிருந்த மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

-------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு ஐய வினா ஒன்றிற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிருவாகம்

(ஈ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு